வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4736 /ஆ4/2022 நாள்.10.11.2022

பொருள் பள்ளிக்கல்வித்துறை –வேலூர் மாவட்டம்–மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் –TATA Electronics காலிப்பணியிடங்களை நிரப்பும் பொருட்டு சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் –2020–2021 மற்றும் 2021–2022 கல்வி ஆண்டில் பயின்று முடித்த மாணவிகளுக்கு தகவல் தெரிவித்தல் – சார்பு

பார்வை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் கடித ந.க.எண்.சி1/6714/2021 நாள் 08.11.2022

==========

பார்வையில் காணும் கடிதத்தின் படி வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலமாக வருகின்ற 12.11.2022 சனிக்கிழமை TATA Electronics நிறுவனத்தின் காலிப்பணியிடங்களை நிரப்பும் பொருட்டு 12–ஆம் வகுப்பு முடித்த 18 முதல் 20 வயது வரை உள்ள மகளிருக்கான சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது .

எனவே 2020–2021 மற்றும் 2021–2022 கல்வி ஆண்டில் 12–ஆம் வகுப்பு பயின்று முடித்த மேற்படிப்பு தொடராத மாணவிகளுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் கலந்து கொள்ள ஏதுவாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை மேல்நிலை தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் தங்கள் பள்ளியில் பயின்ற 12 ஆம் வகுப்பு முடித்து மேற்படிப்பு தொடராத மாணவிகளை அழைப்பானை விடுவித்த விவரம் இத்துடன் இணைத்துள்ள படிவத்தில் பூர்த்தி செய்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்திற்கும் , நகல் ஒன்றினை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்புமாறு அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : 1. குறிப்பானை
2. படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்து வகை மேல்நிலை தலைமை ஆசிரியர்கள்,வே.மா.

நகல்,
1. உதவி இயக்குநர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டு மையம்,வேலூர்–10.

2. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் ) வேலூர் மாவட்டம் .

| படிவம் | | | |
|---|---|---|---|
| பள்ளியின் பெயர் | மாணவியின் பெயர் | முகவரி | தொலைப்பேசி எண் |
| | | | |

தலைமை ஆசிரியர்
கையொப்பம்